# தொல்காப்பிய மன்றம் – கனடா
## Association for Tolkappiyam - Canada
தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

## தொல்காப்பிய விழாப் போட்டிகள் - 2023
### பொது அறிவுப் போட்டி (வினா-விடை): பிரிவு - 8 (2011-இல் பிறந்தோர்)

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களில், கேட்கப்படும் வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.**

1. முத்தமிழ் என அழைக்கப்படுபவை எவை?
   இயல், இசை, நாடகம்

2. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தை எழுதியவர் யார்?
   தொல்காப்பியர்

3. தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரப் பிரிவுகள் எவை?
   எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய மூன்றும்

4. தொல்காப்பியத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் எத்தனை இயல்கள் உள்ளன?
   ஒன்பது

5. தொல்காப்பியத்தில் எத்தனை நூற்பாக்கள் உள்ளன?
   1602

6. சங்கப் புலவர் பட்டியலில் இடம்பெறும் ஈழத்தவர் யார்?
   ஈழத்துப் பூதந்தேவனார்.

7. முப்பால் என அழைக்கபடும் நூல் எது?
   திருக்குறள்

8. திருக்குறளில் உள்ள முப்பால்களும் எவை?
   அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்

9. திருக்குறளில் மொத்தமாக எத்தனை குறட்பாக்கள் உள்ளன?
   1330 குறட்பாக்கள்

10. தமிழுக்கு கதி எனக் கூறப்படும் நூல்கள் எவை?
    க = கம்பராமாயணம், தி = திருக்குறள் ஆகிய இரு நூல்கள்

11. ஔவையார் எழுதிய நூல்கள் எவை?
    ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி

12. தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்கள் எவை?
    சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி,

13. ஐப்பெரும் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியை இயற்றிவர் யார்?
    திருத்தக்கதேவர்

14. பூம்புகார் எந்த நாட்டின் தலைநகராக இருந்தது?
சோழ நாடு

15. சேர நாட்டின் தலைநகராக விளங்கிய இடம் எது?
வஞ்சி

16. பாண்டிய நாட்டின் தலைநகராக விளங்கிய இடம் எது?
மதுரை

17. சோழமன்னர்களின் கொடி எது?
புலிக் கொடி

18. அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த தமிழ் மன்னன் ஒருவனின் பெயரைத் தருக?
எல்லாளன்.

19. நன்னூல் என்னும் நூலை எழுதியவர் யார்?
பவணந்தி முனிவர்

20. திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
ஜி.யு. போப்

21. தான் இறந்தபின் தனது சமாதியில் “A Student of Tamil Literature” என எழுதிவைக்கச்சொன்னவர் யார்?
ஜி.யு.போப்

22. திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர் யார்?
ஜோசேப் பெஸ்கி அடிகளார்.

23. இத்தாலியரான 'ஜோசேப் பெஸ்கி' தனக்கு வைத்துக்கொண்ட தமிழ்ப்பெயர் எது?
வீரமாமுனிவர்

24. 'கப்பலோட்டிய தமிழன்' என அழைக்கப்படுபவர் யார்?
வ. உ. சிதம்பரனார்

25. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்.' எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?
சுப்பிரமணிய பாரதியார்

26. புரட்சிக் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?
பாரதிதாசன்

27. யாழ்நூலை எழுதியவர் யார்?
சுவாமி விபுலாநந்தர்

28. சுவாமி விபுலாநந்தர் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றிய பல்கலைக்கழகங்கள் எவை?
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம்

29. தமிழகத்திலும் ஈழத்திலும் பாடசாலைகளை நிறுவித் தமிழ் வளர்த்த ஈழத்தவர் யார்?
ஆறுமுக நாவலர்

30. ஏட்டுச் சுவடிகளைத் தேடிப்பெற்று நூலாக்கிய ஈழத்தவர் யார்?
சி.வை.தாமோதரம்பிள்ளை

31. முதலாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை ஒழுங்கமைத்த ஈழத்தவர் யார்?
தனிநாயகம் அடிகள்

32. நான்காவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடு எங்கே இடம்பெற்றது?
யாழ்ப்பாணம்

33. தமிழ் மொழிக்கு செம்மொழி என்ற தகுதி எந்த ஆண்டில் வழங்கப்பட்டது?
2009

34. தாய்லாந்து நாட்டில் திருமணத்தின்போது பாடப்படும் தமிழ்ப்பாடல் எது?
திருவாசகம்

35. எத்தனையாம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தனர்?
1505 ஆம் ஆண்டு.

36. சங்கிலியன் தோப்பு எங்கே அமைந்துள்ளது?
யாழ்ப்பாணம் - நல்லூரில்

37. தமிழர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டு அவரின் பெயரில் இயங்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் எது?
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

38. ஐம்புலன்கள் என அழைக்கப்படுபவை யாவை?
1. சுவை, 2. ஒளி, 3. ஊறு, 4. ஓசை, 5. நாற்றம்

39. அறு சுவைகள் எவை?
1. கைப்பு 2. தித்திப்பு 3. புளிப்பு 4. உவர்ப்பு 5. துவர்ப்பு 6. கார்ப்பு?

40. ஐவகை நிலங்கள் எனப்படுபவை எவை?
முல்லை, மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை

41. பறவைகளின் இளமைப் பெயர் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுபவை எவை?
பார்ப்பு, பிள்ளை

42. நாய், பன்றி, புலி, முயல் ஆகியவற்றின் இளமைப் பெயர் எது?
குருளை

43. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனப் பாடியவர் யார்?
கணியன் பூங்குன்றனார்

44. எழினி என்பதற்கு ஒத்த சொல்லைக் கூறுக?
மூடுதிரை, போர்வை

45. எழிலி என்பதற்கு ஒத்த சொல்லைக் கூறுக?
மேகம் அல்லது முகில்

46 தமிழரின் தற்காப்பு விளையாட்டுகளில் ஒன்றைக் கூறுக
சிலம்பாட்டம் , களரி

47. தமிழரின் வீரவிளையாட்டுகளில் ஒன்றைக் கூறுக?
ஏறு தழுவுதல் (ஜல்லிக்கட்டு)

48. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
மறைமலை அடிகள்

49. தமிழ் இலக்கணத்தில் உள்ள வேற்றுமைகள் எத்தனை?
எட்டு

50. எழுவாய்வேற்றுமை எத்தனையாவது வேற்றுமை?
முதலாம் வேற்றுமை

51. செயப்படுபொருள் எத்தனையாவது வேற்றுமை?
இரண்டாம் வேற்றுமை

52. கப்பலோட்டியை எவ்வாறு அழைப்பர்?
மாலுமி, மீகாமன்

53. விமானமோட்டியை எவ்வாறு அழைப்பர்?
வலவன்

54. பெண்களின் ஏழு பருவங்களுள் மூன்றினைக் கூறுக?
பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்

55. தனது நாணயத்தில் தமிழ் இலக்கங்களைக் கொண்டுள்ள நாடு எது?
மொறிசியஸ்

56. தமிழ்த் தாத்தா என அழைக்கப்படுபவர் யார்?
உ. வே. சாமிநாத ஐயர்

57. ஈழத்தமிழர் வரலாற்றில், "கறுப்பு ஜூலை" எனப்படும் நிகழ்வுகள் இடம்பெற்ற ஆண்டு எது?
1983

58. யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்ட ஆண்டு எது?
1981

59. முள்ளிவாய்க்கால் படுகொலைகள் இடம்பெற்ற ஆண்டு எது?
2009

60. Fever என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
காய்ச்சல்

61. Cancer என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
புற்றுநோய்

62. Allergy என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
ஒவ்வாமை

63. Diabetes என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
நீரிழிவு

64. Toothache என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
பல்வலி

65. Heart attack என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
மாரடைப்பு

66. Website என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
இணையத்தளம்

67. Unicode Font என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
ஒருங்குறி எழுத்துரு

68. Browser என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
உலாவி

69. Database என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
தரவுத்தளம்

70. Email என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
மின்னஞ்சல்

71. Software என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
மென்பொருள்

72. Hardware என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
வன்பொருள்

73. Keyboard என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
விசைப்பலகை

74. Micro processor என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
நுண் செயலி

75. Computer virus என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
கணினி நச்சுநிரல்

76. கனடாவின் தலைநகரம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?
ஒன்ராறியோ

77. கனடாவில் எத்தனை மாகாணங்கள் உள்ளன?
10

78. தை மாதத்தில் கொண்டாடப்படும் தமிழர் திருநாள் எது?
தைப்பொங்கல்

79. கனடாவில் தமிழ் மரபுத் திங்கள் எந்த மாதத்தில் கொண்டாடப் படுகின்றது?
ஜனவரி மாதத்தில்

80. தமிழ் மரபுத் திங்களைக் கனடா அரசு உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்ட ஆண்டு எது?
2016

- மேலே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மேலதிகமாகவும் தேர்வின் போது வினாக்கள் கேட்கப்படும்.
- போட்டியாளர்களின் தரவரிசையை (1ம், 2ம், 3ம் இடங்களை) நிர்ணயிப்பதில் சிக்கல் ஏற்படின் அம்மேலதிக வினாக்களின் புள்ளிகள் கருத்திற் கொள்ளப்படும்.